1981 பிப்ரவரி 2]

திரு. டி. மணி : பாசனத்துறை பிரச்னை பற்றி, அனந்தநாறு திட்டம்பற்றிக் கூறினார்கள். இதேபோல் நெய்யாறு இடது கரைக் கால்வாயிலும், சித்தார்—பட்டணங்கால் கால்வாயிலும் சிமெண்ட் லைனிங் போடப்படாத இடங்களில் சிமெண்ட் லைனிங் போடுவதற்கு இந்த நிதி ஆண்டிலாவது அந்தத்திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தனிக்கேள்வி போடு மாறு கேட்டுக்கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 158, 159, 160 மாண்புமிகு தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

கூட்டுறவு வங்கியில் நகைக்கடன்களுக்கான வட்டிவீதம்

குறுகிய கால வினா எண். 3— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு— சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நலிந்த மக்களின் கடன் சுமையை முன்னிட்டு கூட்டுறவு வங்கிகளில் அவர்கள் அடகு வைத்துள்ள நகைக்கடன்கள் மீதான துள்ள வட்டி வீதத்தை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:—நலிந்த பிரிவினருக்கு குறிப்பாக கிராமங்களில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் நகைக்கடன் களுக்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தை 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: 15 சதவீதம் என்பது 14சதவீதம் ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேன். அதேபோல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் நகைக்கடன்களுக்கு எவ்வளவு வட்டி வசூலிக்கப்படுகிறது? மாநில கூட்டுறவு வங்கிகள் வசூலிப்பதை விட அது அதிகமானதா அல்லது குறைவானதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் நலிந்த பிரிவினருக்கு நகைக்கடன்கள் (காடுப் பதில் 16%-ல் இருந்து 18% வரை வட்டி வசூலிக்கிறது. ஆனால் தமிழ்நாடு கூட்டுறவு வங்கிகளும் சங்கங்களும் நலிந்த பிரிவினருக்கு இதுகாறும் 15% என நகைக்கடனுக்காக வசூலிக்க பட்டு வந்த வட்டி விகிதத்தை தற்சமயம் 14% ஆகக் குறைத் திருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகள் கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நலிந்த, ஏழை மக்களின் வசதிகளை மேம்பாடு அடையச் செய்வதுதான் அதன் குறிக்கோள் என்று சொல்லப் பட்டது. அப்படியிருக்கையில், மாநில கூட்டுறவு வங்கிகளில் வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் வட்டி விகிதம் குறைக்கப் படுமா? என்பதைப்பற்றி மாநில அரசு மத்திய அரசை வற்புறுத் துமா, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் கிராமப்புற பொரு ளாதாரத்தை வளர்ப்பதில் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளை விட சற்று அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், நாட்டு டமையாக்கப்பட்ட வங்கிகள் கிராமப்புற பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்வதில் இன்னும் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி யிருக்கிறது. அதேநேரத்தில், நகைக் கடன்கள் பேரில்கூட வட்டி விகிதத்தை நலிந்த பிரிவினருக்கு நாட்டுடமையாக்கப் பட்ட வங்கிகள் குறைக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர் களே, இந்த கிராமக் கூட்டுறவு சங்கங்களில் நகைக் கடன்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவாக இருக்கின்றது என்று பொதுமக்கள் கோரிக்கையிடுவதால், அரசு இதற்கு கூடுதலான தொகையை ஒதுக்க முன்வருவார்களா? என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுகளாக நகைக் கடன் கள் அதிகமாகி வருவதால், கிராமங்களிலே நலிந்த பிரிவினருக்கு உதவி செய்கின்ற வகையில், இன்னும் கூடுதலான தொகை ஒதுக்கப்படும்.

திரு. பி. எம். தங்கவேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நாம் கொண்டுவந்த பல்வேறு கடன் நிவாரணச் சட்டங்களால், பிரைவேட் லெண்டிங் கிராமப்புறங்களிலே இல் லாமல் போய்விட்டது. ஆகவே, கூட்டுறவு சங்கங்களை அதிக மாக ஏற்படுத்தி, ஏழை விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கடன் வழங்குவது வேறு; நகைக் கடன் என்பது வேறு. விவசாயிகள் இதுவரைக்கும் வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்தால், அவர்களுக்கு கடன் வழங்கப் படும். நகைக் கடனை நலிந்த பிரிவினருக்கு கொடுப்பது விரி வாக்கப்படும்.

1981 பிப்ரவரி 2]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் பாங்குகளில் 6¼% வட்டி நகைக் கடன்களுக்கு வாங்கப்படுகின்றது. கிராமப்புற கூட்டுறவு சங்கங்களில், விவசாயிகள் ஏற்கெனவே கடன்பட்டுள்ள காரணத்தினால், நகைகளை வைக்கவேண்டிய நிர்ப்பநதம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கு இந்த அளவில் குறைந்த வட்டி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் தகவல் இல்லை. தகவல் அறிந்து நான் கூறுகிறேன்.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகளுக்கு கடன் கொடுக்கின்ற போது, இந்த கடன் ரூ. 3,000 என்ற அளவில்தான் கொடுக்கிறார்கள். இந்த ரூ. 3,000 என்பதை அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல ஆலோசனையை அரசு ஏற்கிறது. இதுகுறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது ; நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>Tax on sale of tickets for Cricket Matches</u>

Q.NO.141.—THIRU N.KITTAPPA; Will the Hon.the Minister for Revenue be pleased to State:

(a) Whether any tax is collected for the sale of tickets by the Cricket Association in Madras for the test matches; and

(b) if so, the details of the tax collected during the tast five years on this account?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

W/S 128—364 5